பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 09 2026 MONDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விநாயகர் சதுர்த்தி விழா இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. ஹிந்தி உட்பட அனைத்து இந்திய மொழிகளும் வளர்ச்சியடைய வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் □ ா கூறியுள்ளார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட, அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Humaiyun Kobir தெரிவித்துள்ளார்.

5. உலகக் கோப்பை இறுதி வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Dhiraj Bommadevara தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>>>>><<<<<<<

விநாயகர் சதுர்த்தி விழா இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த நாள் அனைவரின் வாழ்வில் அமைதியையும், ஆரோக்கியத்தையும், வளத்தையும் கொண்டு வரட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், இவ்விழா அனைவரின் வாழ்விலும் வளத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரட்டும் என்று வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த விழா அனைவரின் வாழ்க்கையிலும் ஆற்றலையும், செழிப்பையும் வழங்கட்டும் என்று தெரிவித்துள்ளார்.

விநாயகப் பெருமானின் அருளால் நாடு வளர்ச்சிப் பாதையில் முன்னேறட்டும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நாடுமுழுவதும் பக்தியுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படும் இந்நாளில், முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானை வழிபடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி, வளம் மற்றும் வெற்றியை விநாயகப் பெருமாள் அருளிட பிரார்த்திப்பதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

ஹிந்தி தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்□ ா வெளியிட்டுள்ள பதிவில், நல்லாட்சி, தேசிய ஒருமைப்பாடு மற்றும் தொலைத் தொடர்பில் ஹிந்தி முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

ஹிந்தி உட்பட அனைத்து இந்திய மொழிகளும் வளர்ச்சியடைய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்திய மொழிகளுடன் முன்னேறி வரும் ஹிந்தி மொழி, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மொழியாக உருவெடுத்துள்ளதாக திரு. அமித் □ ா கூறியுள்ளார்.

மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், கோடிக்கணக்கான மக்கள் பேசும் மொழியாக ஹிந்தி திகழ்வதாக தெரிவித்துள்ளார்.

இலக்கியம், ஊடகம், திரைப்படம், தொலைக்காட்சி, கல்வி மற்றும் தற்போதைய டிஜிட்டல் உலகிலும் ஹிந்தி மொழி பிரபலமாகி வருவதாக அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஹிந்தி மொழி இந்தியாவை ஒருங்கிணைப்பதாக தெரிவித்தார்.

அறிவியல், தொழில்நுட்பப் புத்தாக்கத்தில் ஹிந்தி மொழி கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

>>>>>>><<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட, அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

*சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது, ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளை ரஷ்ய அதிபருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்கியதை சுட்டிக்காட்டினார்.*

*(சவுண்ட் பைட் - எல். முருகன் 51 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*அமெரிக்காவின் Houston-ல் இன்று தொடங்கவுள்ள ஜி.20 எரிசக்தி துறை அமைச்சர்களின் உச்சிமாநாட்டில் பங்கேற்க மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் அங்கு சென்றுள்ளார்.*

*ஈரான் பிரச்சினை காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்து வரும் நிலையில் இந்த உச்சிமாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.*

*முன்னதாக, Houston-ல் வசிக்கும் இந்தியர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், இந்திய கலாச்சாரத்தை பேணிக்காப்பதில் அவர்களின் பங்கு போற்றத்தக்கது என்று தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*இந்தியா - நியூஸிலாந்து இடையேயான கடற்படை உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக, இந்திய கடற்படை வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கடற்படை தளபதி அட்மிரல் Krishna Swaminathan அரசுமுறைப் பயணமாக நியூஸிலாந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*Auckland-ல் உள்ள Philomel கடற்படை தளத்தில் அந்நாட்டு கடற்படை அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடவுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Humaiyun Kobir கூறியுள்ளார்.*

*டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருநாடுகளின் நலன்கள் அடிப்படையில் உறவுகளை மேம்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.*

*பங்களாதேஷின் வளர்ச்சிக்காக உலக நாடுகளுடன் ஆலோசனை நடத்தி வருவதாக திரு. Humaiyun Kobir தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

பங்களாதேஷில் தட்டம்மை நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 22-ஆக அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து பரவிவரும் இந்த நோயால் மேலும் 905 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலால் இந்த ஆண்டு 149 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 561 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

உலக நாடுகள், சுகாதாரத் துறையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. Tedros Adhanom வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சுகாதாரத்துறையில் ஒத்துழைப்பு, புத்தாக்கம், நிலையான நிதி ஆதாரம் போன்றவை அவசியம் என்று கூறியுள்ளார்.

அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் சுகாதார சேவைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. Tedros Adhanom கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

பாகிஸ்தானின் Balochistan மாகாணத்தில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட எரிவாயு வெடித்து நேரிட்ட விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

Harnai மாவட்டத்தில் உள்ள இந்த சுரங்கத்தில் எரிவாயு கசிந்து, வெடித்து விபத்து நேரிட்டதாக அம்மாகாண நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 5 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசின் மக்கள் கல்வி நிறுவனம், மதுரையில் தொழிற்பயிற்சி அளித்து வருகிறது.

15 முதல் 49 வயது வரை உள்ளவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி வருவதாக அந்த நிறுவனத்தின் தலைவர் திரு. John David தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - ஜான் டேவிட் 51 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

குஜராத்தில் தொடர் கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

காந்திநகர், அஹமதாபாத், வதோதரா, ராஜ்கோட் உள்ளிட்ட 19 மாவட்டங்களின் தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மணிக்கு 61 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசுவதால், மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

துவாரகா, போர்பந்தர், கட்ச் உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த 24மணி நேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

பீகாரின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

Champaran, Bhojpur, Gopalganj உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சூறாவளிக் காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<

உலகக் கோப்பை இறுதி வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Dhiraj Bommadevara தங்கப்பதக்கம் வென்றார்.

மெக்ஸிகோவின் Saltillo-வில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அவர், ஜப்பானில் Nakanishi Junya-வை 6-5 என்ற கணக்கில் வென்றார்.

உலகக் கோப்பை வில்வித்தை போட்டியின் ஆடவர் பிரிவில் தங்கப்பதக்கம் வெல்லும் முதல் இந்திய வீரர் என்ற சாதனையை தீரஜ் படைத்துள்ளார்.

>>>>>>>END<<<<<<<